# கதிர்காமச் சத்திரியர்கள் - கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு


பு.கௌரி[1]&ப.புஷ்பரட்ணம்[2]

[1] வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[2] வரலாற்றுத்துறை, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.



**ஆய்வுச் சுருக்கம்**

கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அனுராதபுரம் சிறப்பான அரசியல் மையமாக விளங்கிய போதும் அதற்கு தெற்கிலும், வடக்கிலும் இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக குருசில்கள், நிலக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர் என்போரது ஆட்சி நடைபெற்றதை பாளி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வானது கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களைச் சான்றாகக் கொண்டு, அனுராதபுர அரசு நிலைபெற்றிருந்த சமகாலத்தில் கிழக்கிலங்கையானது கதிர்காமச் சத்திரியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்கின்ற உண்மையை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் படிகள், நிழற்படங்கள் என்பவை ஆய்விற்குட்படுத்துவதுடன், தெளிவற்றதும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதப்படுகின்ற கல்வெட்டுக்கள் நேரடியான களவாய்விற்கு உட்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெறப்படவுள்ளன. அத்துடன் இவ்வாய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வுகளுடன் ஒப்பிட்டு கருத்தைச் சீரமைக்கின்ற ஒப்பீட்டாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வம்சத்தவரின் ஏழு தலைமுறையினர் (பரம்பரைகள்) கிழக்குப் பிராந்தியத்தில் எவ்வித தலையீடுமின்றி அரசாட்சி நடத்தியமைக்கும், அவர்களது கிளைமரபினரின் ஆட்சி கிழக்கின் சில பிராந்தியங்களில் காணப்பட்டது என்பதற்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாக அமைகின்றன. அதாவது மூத்தோர் வம்சம், இளையோர் வம்சம் என்றவாறு இவர்களது ஆட்சிப் பரப்பு பாகுபடுத்தப்பட்டிருந்தது. இவர்களது ஆட்சி மாணிக்க கங்கை மற்றும் கும்புக்கன் ஓயா பகுதிகளை மையப்படுத்தியிருந்ததுடன், இவற்றின் வடக்கே மட்டக்களப்பை அண்மித்த முந்தனை ஆற்றுப் பகுதிவரை நடைபெற்றுள்ளது என்று கருதத்தக்கவகையில் பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. மஜிம ராஜ வழிவந்த இச்சத்திரிய குலத்தோரால் 17 குகைத் தானங்கள் வழங்கப்பட்டமையானது, இவர்களது வளத்தையும், செல்வாக்கையும் வெளிப்படுத்துகின்றது. அத்துடன் பௌத்த சங்கத்திற்கு இவர்களின் பேராதரவு காணப்பட்டதுடன் தமது நன்கொடைகளை கல்வெட்டுக்களில் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தமை, அவர்களது பரம்பரை பற்றிய விபரங்களை வெளிப்படுத்தியமை போன்றவை சமய ஆர்வத்தை தவிர தமது கௌரவத்தினை வெளிப்படுத்தும் உந்துதலாகவே அமைந்துள்ளது எனலாம்.



**அரும்பதங்கள்:** கதிர்காமச் சத்திரியர்கள், பிராமிக் கல்வெட்டுக்கள்,இளையோர் வம்சம், மூத்தோர் வம்சம்


## 1.0 அறிமுகம்:

புராதன இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி அறிவதற்குப் பாளி இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்லியற் சின்னங்கள் என்பன உதவுகின்றன. இவற்றில் பௌத்த சங்கம் சார்ந்தோரால் எழுதப்பட்ட பாளி இலக்கியங்கள் அநுராதபுர இராசதானியை மையப்படுத்தி தீவு முழுவதும் ஒற்றையாட்சி நடைபெற்றது போன்றதான பார்வையை ஏற்படுத்துகின்றன. கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அனுராதபுரம் சிறப்பான அரசியல் மையமாக விளங்கிய போதும் அதற்கு தெற்கிலும், வடக்கிலும் இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக குருசில்கள், நிலக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர் என்போரது ஆட்சி நடைபெற்றதை அவ்விலக்கியங்களும், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பனவும் உறுதிப்படுத்துகின்றன.

நாடுபூராகவும் 1500க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் 269 குகைத்தளங்களில் ஏறத்தாழ 28 குறுநில அரசுகள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன எனும் வரலாற்றுண்மை ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (Gunavardana 1985:1-37). குறிப்பாக தேவநம்பிய தீஸன் காலம் முதல் கிறிஸ்து சகாப்தத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியிலுள்ள இக்கல்வெட்டுக்கள் நாடெங்கிலும் நாக, வேள் முதலான வம்சத்தவர்களின் ஆட்சி நடைபெற்றதை எடுத்துக்காட்டுகின்றன. கிறிஸ்தாப்தத்தினை அண்டியுள்ள காலப்பகுதியில்தான் இவற்றில் பல வலிமையுள்ள பிராந்திய அரசுகளின் செல்வாக்குக்கு உட்பட்டன என்பதை பிராமிக்கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. ஆயினும் அனைத்து குறுநில அரசுகளும் இவ்வாறு மேலாதிக்கத்திற்குட்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## 2.0 நோக்கம்:

கிழக்கிலங்கையின் அரசியல் வரலாற்றில் அனுராதபுர அரசு உருவாக்கம் பெற்றிருந்த சம காலத்தில் மற்றுமொரு சிற்றரசான கதிர்காமச் சத்திரியர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளது. எனினும் இப்பிராந்தியத்தின் புராதன வரலாற்றம்சங்களை வெளிக்கொண்டுவரத்தக்க இலக்கியப் பாரம்பரியத்தைக் காணமுடியவில்லை.கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக எழுதப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதன் மூலம்

அக்கால கிழக்கிலங்கையின் அரசியல்நிலைமைகளை ஆதாரத்துடன் உறுதிப்படுத்த முடியும். இந்நோக்கத்திற்காகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.0 ஆய்வின் கருதுகோள்:

நம்பகரமான ஆதாரங்களாக உள்ள பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதனூடாகக் கிழக்கிலங்கையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக கதிர்காமச் சத்திரியர்களின் அரசாட்சி நடைபெற்றுள்ளது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

### 4.0 ஆய்வு மூலங்கள்:

### 4.1 முதன்நிலைத் தரவு:

1970களிற்கு முன்னர் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பரணவிதானவால் அடையாளங் காணப்பட்டு 'Inscription of Ceylon' எனும் பெயரில் இரு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுதிகளில் உள்ள 189 கல்வெட்டுக்களுடன், கிழக்கிலங்கையில் அண்மைய ஆய்வுகளின் மூலம் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் முதலானோரால் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களும், ஆய்வாளரால் களவாய்வு மூலம் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் முதன்நிலைத் தரவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

### 4.2 இரண்டாம் நிலைத் தரவுகள்:

கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் கூறும் விடயங்களினூடாக முழுமையான வரலாற்றினை வெளிக்கொண்டுவருவதற்கு இலங்கைப் பாளி இலக்கியங்களான மகாவம்சம், சூளவம்சம் முதலானவையும், தமிழகத்தில் கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் மற்றும் தொல்லியற் சின்னங்களும் இவ்வாய்விற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன. ஆய்வுத் தலைப்புடன் தெடர்புடைய இதுகாறும் வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகள்,நூல்கள், சஞ்சிகைகள், நாளிதழ்கள், ஆய்வேடுகள், அறிக்கைகள், இணையத்தளக் கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுகளாகக் காணப்படுகின்றன.

### 5.0 பாளி இலக்கியங்களில் கதிர்காமச் சத்திரியர்கள்

மகாவம்சம், தீபவம்சம் முதலான பாளி இலக்கியங்களில் கதிர்காம,சந்தனகமச்சத்திரியர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன(M.V.XIX:54, V.P :407). இவர்களது ஆட்சிப்பரப்பு உரோகணத்தில் அமைந்திருந்தது என்பன பற்றியும்,காக்கவண்ண தீஸனின் சம காலத்தில் கல்யாணி இராச்சியம் திஸ எனும் அரசனால் ஆளப்பட்டதுடன் (MV.XXII:13-22), இவனது சகோதரன் உத்திய 'உத்திய ஜனபதாவை' ஆட்சி செய்தான் எனவும் குறிப்பிடப்படுகின்றன(V.P :431). துட்டகாமிணியின் அனுராதபுரத்தை கைப்பற்றுவதற்கான படையெடுப்பில் நாட்டின் தென்கிழக்கு முதல் அனுராதபுரம் வரையிலான பிராந்தியங்களின் ஆட்சியாளர்களான 32 தமிழ் அரசர்களை வெற்றிகொண்டதாக இவ்விலக்கியங்கள் குறிப்பிடுகின்றன (M.V.XX:75, Sahassavatthupakarana :95,104). எனவே கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் பல பிராந்திய சிற்றரசுகள் அநுராதபுர அரசின் மேலாணைக்குட்பட்டவாறோ, சுதந்திரமாகவோ இயங்கியிருந்தன என்பது இதனூடாகத் தெளிவாகின்றது.

சங்கமித்தை தலைமையில் கொண்டுவரப்பட்ட போதிமரக் கிளையை அநுராதபுரத்தில் நடுகின்ற நிகழ்வில் பலர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதில் கதிர்காம, சந்தணகமச் சத்திரியர்கள் என்போரும் பங்குபற்றியிருந்தனர்(M.V. XIX:54). அத்துடன் அரச மரக்கிளை நாட்டின் பல பாகங்களிலும் நடப்பட்டபோது, இவ்வரசர்களின் ஆட்சிப் பரப்பிலும் நாட்டப்பட்டன. இவற்றினூடாக இம்மன்னர் பரம்பரையினர் பௌத்த சமய ஆதரவாளர்களாகக் காணப்பட்டனர் என்பது தெளிவாகின்றது. எனினும் இவ்விலக்கியங்களில் இவர்களது உற்பத்தி முறை பற்றிய எவ்வித தகவலுமில்லை. தேவநம்பிய தீஸனின் அழைப்பினை ஏற்று கதிர்காம, சந்தனகமச் சத்திரியர்கள் நிகழ்வில் கலந்து கொண்டமையை அநுராதபுர இராசதானியின் மேலாட்சியை இவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது என்ற போக்கில் தமது கருத்துக்களை பரணவிதான முன்வைத்துள்ளார்(Paranavitana 1959:146). ஆனால் இத்தொடர்பு நட்பு அடிப்படையிலானதாக அதாவது சமநிலையிலுள்ள இரு அரசுகள் தோழமையின் அடிப்படையில் முக்கிய விழாவில் கலந்து கொண்டிருப்பதற்கும் வாய்ப்புண்டு என்பதை மறந்துவிட்டனர்.

### 6.0 பிராமிக் கல்வெட்டுக்களில் கதிர்காமச் சத்திரிய வம்சத்தவர்

### 6.1 மூத்த வம்சம்

கிழக்கிலங்கையிலுள்ள கி.பி முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் ஏறத்தாழ 18 கல்வெட்டுக்களில் நேரடியாக அரசர், அரசியர், இளவரசர்கள், இளவரசியர், இவர்களது அதிகாரிகள் என்போர் பற்றிய விபரங்களைத் தருபவையாக அமைகின்றன. மேலும் சில அரச குடும்பத்தவர்களது கல்வெட்டுக்கள் என ஊகிக்க கூடியவாறான விபரங்களை வெளிப்படுத்துகின்றன. கதிர்காமச் சத்திரிய வம்சத்தவரின் ஏழு தலைமுறையினர் (பரம்பரைகள்) இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு பிராந்தியத்தில் எவ்வித தலையீடுமின்றி அரசாட்சி நடத்தியமைக்கும், அவர்களது கிளைமரபினரின் ஆட்சி கிழக்கின் சில பிராந்தியங்களில் காணப்பட்டது என்பதையும் பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பறை- ஹெனேன்னகல எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் காமிணி திஸ மற்றும் அவரது தந்தை ராஜ மஜிம என்போர் கி$_3$ரிதிஸகம, கரஜி(நி)திஸகம, விலகம, கஸப நக$_3$ர, மளகம(மள்ள(ன்) கமம்),

நொகபிக ஆகிய ஐந்து கிராமங்களையும் ஒரு நகரத்தையும் பௌத்த சங்கத்திற்கு தானம் வழங்கிய செய்தி குறிப்பிடப்படுகின்றது(I.C.406). கல்வெட்டு ஆதாரங்களின்படி மஜிம ராஜவுடன் ஆரம்பிக்கும் இவ்வம்சம் தொடர்பாக அண்மைக்காலம் வரை கிடைக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் ஏழு பரம்பரையினர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வோவட்டகலவிலுள்ள மூன்று கல்வெட்டுக்கள் கதிர்காமச் சத்திரிய வம்சத்தின் பத்துச் சகோதர அரசுகள் பற்றிய தகவல்களைத் தருகின்றன(I.C.1970.Nos.549,550,551).இவ்விடம் கதிர்காமத்திற்கு கிழக்கே 30 மைல் தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் வோவட்டகலவை மிக அண்மித்த பிரதேசமான கொத்தடமுஹெல தற்போது அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குள் அடங்குகின்ற போதும் புராதன காலத்தில் சத்திரிய அரசர்களின் ஆட்சிக்குட்பட்ட இடம் என்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள 14 கல்வெட்டுக்கள் இவ்வம்சத்தவர் தொடர்பான தகவல்களைத் தருகின்றன(I.C.1970.No.556-569). 2008 ஆம் ஆண்டில் எல்லாவல மேதானந்த தேரோவால் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட நூலில் உகணைப் பகுதியிலுள்ள மாதனகந்த எனுமிடத்தில் கண்டறியப்பட்டு கல்வெட்டொன்று இவ்வம்சத்தவர்களின் ஏழாவது வாரிசு தொடர்பில் புதிய தகவலை வெளிப்படுத்துகின்றது(படம்-01) (N.S.G 2008:No.36).

இக்கல்வெட்டுக்கள் அனைத்திலும் (19) இவ்வம்சத்தின் குலச்சின்னமான மீன் சின்னமும், பீடத்துடன் கூடிய சுவஸ்திகாவும் காணப்பட்டமையானது இவர்களை இலகுவில் அடையாளங் காண உதவுகின்றது(படம்-02). இப்பரம்பரையின் முதலாவது அரசனாக 'ராஜ மஜிம'வை அடையாளங் காண முடிகின்றது. 'மஜிம' என்பது மச்ச எனப் பொருள்படும். இது மீனைக் குறிக்கின்றது. எனவே மீனவராஜ அல்லது மீன் ராஜன் எனக் கொள்ள முடியும். மற்றுமொரு முக்கிய விடயம் தமிழகத்தில் ஆட்சி செய்த தொன்மைமிகு பாண்டிய மன்னர்களின் குலச்சின்னம் மீன் என்பதாகும். இவர்களது நாணயங்களில் இச்சின்னம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக பெருங்கற்பண்பாட்டின் செல்வாக்கு தமிழகத்திலிருந்தே இலங்கைக்கு ஏற்பட்டது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. இந்நிலையில் தமிழக அரச உருவாக்கம் போன்றே ஈழத்திலும் அரசு உருவாகியது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், தமிழகத்திலிருந்து பாண்டியர் அல்லது பாண்டியரின் கீழ் ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் இலங்கையின் தென்கிழக்கே இடம்பெயர்ந்திருக்கலாம். இவர்கள் தமது குலமரபைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் ராஜ மஜிம எனும் பெயரையும், தமது குலச்சின்னத்தையும் கல்வெட்டுக்களில் பொறித்தனர் எனக் கொள்ள முடியும். எனவே இவ்வம்சத்தோரை கதிர்காம பாண்டிய சத்திரிய வம்சம் எனக் குறிப்பிடலாம். 'ராஜ மஜிம' இவ்வம்சத்தின் ஸ்தாபகர் (கல்வெட்டு ஆதாரங்கள் இதுவரை

உகணை- மாதனகந்தவில் 2008 இல் கண்டறியப்பட்ட கல்வெட்டில் அபி$_3$ ஸவேரா "பசிந பூமியின் அரசனின் தாய்" என இவர் கிடைத்துள்ளவற்றின் அடிப்படையில்) எனக் கருத முடியும்.

கல்வெட்டுக்கள் கிடைத்துள்ள பிரதேசங்களை நோக்குகின்ற போது இவர்களது ஆட்சியானது மாணிக்க கங்கை மற்றும் கும்புக்கன் ஓயா பகுதிகளை மையப்படுத்தியிருந்தது. எனினும் ராஜா மஜிமவின் கல்வெட்டு இவற்றின் வடக்கே மட்டக்களப்பை அண்மித்த முந்தனை ஆற்றுப் பகுதிகளில் கண்டறியப்பட்டது (அம்பாறை- விந்தனைப்பற்றில் பதுளை, மட்டக்களப்பு வீதியிலிருந்து 6 மைல் வடமேற்கே 67 வது மைல்கல் தூரத்தில் அமைந்துள்ளது). இது கும்புக்கன் ஓயாவிலிருந்து நீண்ட தூரமாகும். பிற்காலத்தில் இப்பகுதியை அண்டிய பகுதிகளில் கதிர்காமச் சத்திரியர்களின் கிளை மரபினரின் ஆட்சி நடைபெற்றமைக்கு மூன்றிடங்களில் கல்வெட்டுச் சான்றுண்டு. எனவே முதலாவது தலைமுறையினரான ராஜா மஜிமவின் காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியம் உட்பட அதாவது கருதுபொதானை வரையிலான பகுதிகள் இவ்வம்சத்தவர் வசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் இவரது இரண்டாம் சந்ததியினரிடையே பங்கிடப்பட்டுள்ளது எனலாம்.

வோவட்டகல எனுமிடம் கும்புக்கன் ஓயாவின் வடக்கே அமைந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டொன்றில் பத்து சகோதர அரசர்களின் மூத்தவனின் மகன் 'ராஜா தம்ம' என்பவன் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது (I.C549). இதனூடாக பத்து சகோதர அரசர்களின் தந்தையின் பெயர் 'காமிணி' எனத் தெரியவருகின்றது.

"தமரஜ தமரஜஹ புத மஹாதிஸ அயே கரிதே கிம லெணே மஹாசுடஸநே ஸகஸ திணே"(I.C.1970.No.549)

இங்குள்ள மற்றுமொரு கல்வெட்டில் (I.C.1970.No.550) காமிணியின் மகன் ராஜ உதி, ராஜ உதியின் மகன் அய அபய எனவும், அபயவின் மகள் அபி$_3$ அனுரதி என்பவர் வழங்கிய தானம் பற்றிக் கூறப்படுகின்றது. இங்கு காமிணியின் மற்றுமொரு மகனான உதி பெயரிடப்பட்டுள்ளான்.

மூன்றாவது கல்வெட்டும் ராஜா தம்மவின் மகன் அய மஹாதிஸவால் உருவாக்கப்பட்ட தானம் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுகின்றது (I.C.551). கொத்தடமுஹெல கல்வெட்டுக்களில் இவ்வம்சத்தின் ஆறாவது பரம்பரையினர் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றது. ராஜதம்மவின் மகனான அய மஹாதிஸவின் மகள் அபி ஸவேரா எனக் குறிப்பிடுவதுடன் இவள் அய அபயவின் மகனான அய திஸவின் மனைவி எனவும் கூறப்படுகின்றது (I.C.556-569). இங்குள்ள 14 கல்வெட்டுக்களும் அபி ஸவேரா வழங்கிய தானத்தையே பதிவு செய்துள்ளன.

"தமரஜ புத மஹாதிஸ அயஹ ஜித அபி ஸவேரா அயபய புத திஸ அயஹ ஜய அபி ஸவேரா தணே ஸகஸ திணே"(I.C.556)

குறிப்பிடப்படுகின்றார். (படம்-02). இப்பரம்பரையின் ஏழாவது வாரிசு பசிந பூமியின்(கிழக்குப் பூமி) அரசனாவான்.

“தமரஜ புத மஹாதிஸ அயஸ ஜித அபி$_3$ ஸவேரய ரஜமதய பசிந பூ$_3$மிய மஹாசுத$_3$நே நம லெணே அகத அநாகத சதுதிஸ ஸகஸ தியதே” (N.S.G.2008:No.36)

மொத்தமாக ஏழு பரம்பரையினர் கதிர்காமச் சத்திரியர் குலத்தில் ஆட்சி செய்துள்ளமை இவற்றினூடாகத் தெளிவாகின்றது. ஏறத்தாழ 1½நூற்றாண்டு காலம் இவர்களது ஆட்சி இப்பிராந்தியத்தில் நிலைபெற்றிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.


பத்து சகோதர அரசர்கள் பற்றிய செய்தியொன்று தாதுவம்சத்தில் இடம் பெறுகின்றது. அதாவது மகாவம்சத்தில் தேவநம்பிய தீஸனின் சகோதரனான மகாநாகவின் பேரனான கோதாபாயவால் கதிர்காமத்தின் பத்து சகோதர அரசர்கள் கொல்லப்பட்டனர் எனவும், இப்பாவத்திற்கான பிராயச்சித்தமாக 1000 விகாரைகளை இப்பிராந்தியத்தில் அமைத்தான் எனவும் குறிப்பிடுகின்றது (UCHC 1959:145-147) (Dhatuwamsa 1930:23). தாதுவம்சத்தின் கூற்றை நாம் ஏற்றுக் கொண்டால் கதிர்காம பத்து சகோதர அரசர்கள் கோதாபாயவால் கொல்லப்பட்டதனால் அவர்களது பரம்பரையும் அதனோடு மறைந்திருக்கும் என்ற முடிவிற்கு வரமுடியும். ஆனால் இதற்கு மாறாக சகோதர அரசர்களுக்குப் பின்னர் அவர்களது நான்கு தலைமுறை வாரிசுகள் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். நான்காவது பரம்பரையினன் “பசிந பூமி ராஜ” என அழைக்கப்பட்டான். எனவே தாதுவம்சத்தின் இக்கருத்தானது வரலாற்றுண்மைக்கு புறம்பானதாகத் தெரிகின்றது. இக்கதையானது கதிர்காமத்திற்கு வடக்கே உள்ள பிரதேசங்களில் ஏனைய வம்சத்தினர் சுதந்திர ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட முரண்பாட்டையே காட்டுகின்றது என குணவர்த்தன குறிப்பிடுகின்றார் (1985:35).

**மூலம்: ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது.**

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்ற அபி$_3$ ஸவேராவின் மகன் கிழக்குப் பிராந்தியத்தின் அரசன் (பசிந பூமி ராஜ) என கல்வெட்டுக் கூறுகின்ற போதிலும் அவனது பெயர் குறிப்பிடப்படவில்லை. இங்கு கிழக்குப் பூமியாக வர்ணிக்கப்படுவது கதிர்காமத்தின் கிழக்குப் பிராந்தியம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவர்களது முன்னைய ஐந்து தலைமுறையினர்பற்றிக் கூறுகின்ற கல்வெட்டுக்களும் கிழக்கிலங்கையில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளன. எனவே மிக நீண்ட காலம் கிழக்கிலங்கையில் கதிர்காமச் சத்திரியர்களின் சுதந்திர ஆட்சி நடைபெற்றது என்பது இதனூடாகத் தெளிவாகிறது.

பரணவிதான பாண்டிய மரபில் வந்த கதிர்காமச் சத்திரியர்களின் பரம்பரையினர் என அடையாளங் காண்கின்ற அபி ஸவேராவை, களனிதிஸ்ஸ மன்னனின் மகளும் காக்கவண்ணதீஸனின் மனைவியுமான விகாரமாதேவியுடன் அடையாளங் காண முனைகின்றார். (Paranavitana 1959:145-148).பொதுவாக காமிணி, திஸ்ஸ, அபய முதலான பெயர்கள் சமகாலத்தில் ஏராளமானவர்களுக்கு இருந்துள்ளமைக்கு பிராமிக் கல்வெட்டுக்களில் சான்றுண்டு. அத்துடன் திஸ்ஸ எனும் பெயர் சமூகத்தின் பல்வேறு மட்டத்திலிருந்தோரும் பெற்றிருந்த பெயர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. எனவே மூவரின் பொதுவான பெயர்களை வைத்துக் கொண்டு இரு வேறான அரசமரபினை ஒன்றிணைக்க முடியாது.

**வரைபடம்-01**



போதிமரக்கிளை நாட்டுகின்ற நிகழ்விற்கு கதிர்காமச் சத்திரியர்கள் வருகை தந்திருந்தனர் எனக் கூறுகின்ற மகாவம்சம், காக்க வண்ண தீஸனது மணஉறவு பற்றிக் கூறுகின்றவிடத்து தெளிவாக கல்யாணி(களனி) இராச்சியத்தின் ஆட்சியாளனே விகாரமாதேவியின் தந்தை திஸ என்கிறது(M.V.XXII:12-13). அரசுகள் பற்றிய முக்கிய விடயத்தைக் குறிப்பிடுகின்றவிடத்து மகாவம்சம் ஒரு அரசை இருவேறுபட்ட பெயர்களில் கூறமுடியாது. களனி இராச்சியம் இலங்கையின் மேற்கே அமைந்திருக்க, கதிர்காமமும் அதன் ஆட்சிப்பரப்பும் தென்கிழக்கு, கிழக்கு இலங்கையில் அமைந்திருந்தன. எனவே சமகாலத்தில் நாட்டின் வெவ்வேறு இரு பிராந்தியங்களில் நிலைபெற்றிருந்த இருவேறு இராச்சியங்களை ஒன்றிணைக்க முயல்வது வரலாற்றில் உண்மைத் தன்மையை திசைதிருப்பும் முயற்சியாகவே கொள்ள வேண்டியுள்ளது.

எனினும் இவ்வம்சத்தின் முதலாவது அரசனான ராஜ மஜிமவின் கல்வெட்டு கதிர்காமத்திற்கு வடக்கே முந்தனை ஆற்றுச் சமவெளிப் பகுதியில் அதாவது அம்பாறை விந்தனைப்பற்றில், பதுளை-மட்டக்களப்பு வீதியில் ஆறு மைல் வடமேற்கே 67வது மைல் கல்லை அண்மித்த பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இது கும்புக்கன் ஓயாவிலிருந்து மிக நீண்ட தூரமாகும். மீன், சுவஸ்திகா பொறித்த கல்வெட்டுக்கள் அதிகளவில் இப்பகுதிகளில் கிடைக்கவில்லை. ஆனால் கிளை மரபினரின் ஆட்சி நடைபெற்றுள்ளமைக்கு கல்வெட்டுச் சான்றுண்டு. எனவே முதலாவது தலைமுறையினரான ராஜ மஜிமவின் காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியம் உட்பட அதாவது களுதுபொதானை வரையான பகுதிகள் மஜிம ராஜா வசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் அவரது பரம்பரையினரிடையே முழு இராச்சியமும் பங்கிடப்பட்டுள்ளது என்ற முடிவிற்கு வரமுடியும். அதாவது ராஜ மஜிமவின் காலத்தில் மட்டக்களப்பு முதல் அம்பாந்தோட்டை வரையிலான நீண்ட பிராந்தியத்தின் ஆட்சியாளர்களான கதிர்காமச் சத்திரிய வம்சத்தவர்கள் பிற்காலத்தில் தமது ஆட்சிப்பரப்பை மூத்தோர், இளையோர் என்றவாறு பகிர்ந்துள்ளனர் எனக் கருதமுடியும். இதற்கான சான்று மொட்டயகல கல்வெட்டில் காணப்படுகின்றது.

### 6.2 இளையோர் வம்சம்

கல்லோயா ஆற்றின் தெற்கே கிழக்கு கரையோரத்தை அண்டியதாக உள்ள மொட்டயகல்லு எனுமிடத்திலுள்ள கல்வெட்டொன்றின் முதல் வரியை 'த₃ச வதிகரண (ஜா)வகநய உபராஜ நாக' என பரணவிதான வாசித்துள்ளார்(I.C.487). இக்கல்வெட்டின் மூன்றாவது சொல்லை அவர் 'ஜாவக நய' எனக் கொண்டு இக்கல்வெட்டின் வாசகத்தை பத்து சகோதர அரசர்களின் ஜாவகத் தலைவனான உபராஜ நாகவின் (மருமகனான) பேரப்பிள்ளையான மஹாபாஷாதிக அபய ராஜவின் மகன் காமிணி திஸவினது விகாரை பௌத்த பிக்கு சங்கத்திற்கு வழங்கப்பட்டது என்கின்றார். ஆனால் இதனைத் திருத்தத்துடன் சரியாக வாசித்த குணவர்த்தன "பத்து சகோதர அரசர்களின் இளையவனான உபராஜ நாக" எனப் பொருள் கொண்டார்(Gunavardana 1985:18-19).

'த₃ஸவ₃திகரண ஷ(ா)வகனெய உபராஜ நாக₃ உபராஜ நாக₃ மறுமகநகே மஹா (பா)ஸதிகே அவய ரஜஹ புதே காமிணி (தி)ஸஹ விஹாரே அகத அநாகத வி₃கு ஸக₃ஸ நியதே'(I.C.487)

பரணவிதானஇக்கல்வெட்டுக் கூறும் உபராஜ நாகவை, அனுராதபுர ஆட்சியாளனான தேவநம்பிய தீஸனின் தம்பியான மஹாநாகவுடன் அடையாளங் காண்கின்றார் (Paranavitana 1970:lvi-lix). ஆனால் இக்கல்வெட்டு குணவர்தனவினால் மீள்வாசிப்பிற்கு உட்பட்டமையினால் அதன் பொருள் முற்றிலும் மாற்றம் பெற்று புதிய கிளை வம்சம் ஒன்றின் வரலாறு வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி பத்து சகோதர அரசர்களின் இளையவனாக உபராஜ நாக குறிப்பிடப்படுகின்றான்(பார்க்க:வரைபடம்-1). வோவட்டகலக் கல்வெட்டில் மூத்த சகோதரன் பற்றி குறிப்பிடப்பட்ட அதே நேரம் மொட்டயகல்லு கல்வெட்டு இளைய சகோதரன் பற்றிக் குறிப்பிடுகின்றது.

இதே அரச வம்சத்தவரின் கல்வெட்டொன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பதுளை-மட்டக்களப்பு வீதியில் 35வது மைல் கல்லிற்கு வடக்கே 2 கி.மீதூரத்தில் அமைந்துள்ள குசலான்மலையில் உள்ளது. இங்குள்ள 7 கல்வெட்டுக்களில் இதுவுவொன்றாகும். "உபராஜ நாக₃ புத அபய நமதஸ புதே கமணிதிஸே நம தண கரிதே சுடஸணே ஸகஸ"(I.C.389). குசலான்மலையிலிருந்து சில கி.மீ தூரத்தில் பதுளை- மட்டக்களப்பு பாதையில் அமைந்துள்ள இடமே களுதுபொத்தானையாகும் (பதுளை-மட்டக்களப்பு வீதியில் 84 மைல்கல்லிற்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது). இங்குள்ள கல்வெட்டொன்றில் "அய அபய(அயபய) வின் மகனது ஆட்சிப்பரப்பில் உள்ள பருமக சுடணவின் குகை" என்று பொருள்படவுள்ளது (அயபய புதஸ ரஜியஸி கதே பருமக ஸட(ணஸ) லெணே)(I.C.396).இதில் அய அபயவின் மகனான ஆட்சியாளனது பெயர் குறிப்பிடப்படவில்லை. எனினும் குசலான்மலை, மொட்டயகல கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்ற ராஜ அபயவின் மகனான காமிணி திஸவாக இவன் இருக்க முடியும்.

அண்மையில் அம்பாறையின் மலையடிகந்த மலை, சமணகல ஆகிய இரு இடங்களில் எல்லாவெல மேதானந்த தேரரால் கண்டறியப்பட்ட இரு கல்வெட்டுக்கள் மேலே எம்மால் கூறப்பட்ட வம்சத்தினை மேலும் உறுதிப்படுத்தும் சான்றாகக் காணப்படுகின்றது(N.S.G 2008:No.38). அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வழியில் 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள

ஹிங்குரான எனுமிடத்திலிருந்து 8கி.மீ தூரத்திலுள்ள தமண எனுமிடத்திற்கு கிழக்கே 4 கி.மீ தூரத்தில் மலையடிகந்த மலை காணப்படுகின்றது. இங்குள்ள கல்வெட்டொன்றில் ‘காமிணி நாக புத அய அபய புத அய திஸேந கரிதே ஸகᵢஸ திணே’ எனக் குறிப்பிடப்படுகின்றது(படம்- 03). இதில் குசலான்மலை, மொட்டயகல கல்வெட்டில் கூறப்படுகின்ற உபராஜ நாக இங்கு காமிணி நாக என ‘காமிணி’ பட்டத்துடன் குறிப்பிடப்படுகின்றான். கதிர்காமச் சத்திரியர்களின் தந்தையின் (உபராஜ நாகவின் தந்தை) பெயரும் ‘காமிணி’ என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. அபய இங்கு ‘அய’ பட்டத்துடன் குறிப்பிடப்பட்டமையினால் இக்கல்வெட்டு குசலான்மலை, களுதுபொதானை கல்வெட்டு எழுதப்பட்ட காலமாக இருக்கலாம் எனக் கருதமுடியும். மொட்டயகல கல்வெட்டு இவனை ‘ராஜ’ என விளிக்கின்றமையால் இது சிறிது காலத்திற்கு பின்னர் எழுதப்பட்டதாக இருத்தல் வேண்டும். அதேபோன்று மற்றைய கல்வெட்டுக்களில் காமிணி திஸ என அழைக்கப்பட்ட நாகவின் மகன் ‘அய திஸ’ எனப்படுகின்றான்.

சமணகலவிலுள்ள கல்வெட்டின் சிறப்பம்சமானது இதே பரம்பரையின் அடுத்த வாரிசு பற்றிக் கூறுகின்றமையாகும்(N.S.G 2008:No.24)(படம்-04). இவ்விரு கல்வெட்டுக்களும் கிடைக்கும் வரை கதிர்காம இளையோர் வம்சத்தின் மூன்று தலைமுறையினர் மட்டுமே அறியப்பட்டிருந்தனர். இவற்றினூடாக நான்காவது பரம்பரையைச் சேர்ந்த இளவரசன் பற்றிய விடயம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது.

உபராஜ —மகன்→ அய அபய —மகன்→ அய திஸ —மகன்→ அய திஸ

மலையடிகந்த மலை, சமணகல ஆகிய இரு இடங்களும் மொட்டயகலவிற்கு வடக்கே கல்லோயாவை அண்டிய பகுதிகளில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வைந்து பிராந்தியங்களிலும் கூறப்படுகின்ற அரசர்கள் மஜிம ராஜ வழிவந்த கதிர்காம சத்திரிய

வம்சத்தின் இளைய கிளைமரபினர் எனக் கொள்ள முடிகின்றது. பத்து சகோதர அரசர்கள் தமது ஆட்சியதிகாரத்தை சகோதரர்களிடையே பகிர்ந்து ஆட்சியை நடத்தியுள்ளனர். இதனாலதான் மஜிம ராஜவின் பெயரிடப்பட்ட கல்வெட்டுக்கள் குசலான்மலை, களுதுபொத்தனை ஆகிய இடங்களுக்கு அண்மித்ததாக அமைந்திருந்தன. எனினும் அவரது மகனான காமிணியின் மூத்த மகனது சந்ததியினரின் கல்வெட்டுகள் இராச்சியத்தின் தெற்கு பகுதியில் கிடைத்துள்ளன எனலாம். எனவே உபராஜ நாகவும், அவனது பரம்பரையினரும் கிழக்கிலங்கையின் மத்திய பகுதியில் சில பகுதிகளில் அரசாட்சி செய்திருக்கின்றனர் என்கின்ற முடிவிற்கு வரமுடிகின்றது.

பரணவிதான மொட்டயகல கல்வெட்டை முறையாக வாசிக்காது தமது ஆய்வில் குசலான்மலை கல்வெட்டில் குறிப்பிடப்படும் உபராஜ நாகவை மகாநாகவாகவும், ராஜ அபயவை கோதாபாயனாகவும், காமிணி திஸவை காக்கவண்ண தீஸனாகவும் அடையாளங்கண்டமை தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 7.0 மிகிந்தலைக் கல்வெட்டில் கதிர்காச் சத்திரியர் வம்சம்

மிகிந்தலையில் காணப்படும் இரு கல்வெட்டுக்கள் முக்கியமானவை. ஒன்றில் முன்னைய பகுதி சற்றே தெளிவற்றுக் காணப்படுகின்ற போதிலும் கதிர்காம சத்திரிய வம்சத்தவர்களின் கல்வெட்டுக்களில் உள்ள சுவஸ்திகா வடிவம் இதிலும் காணப்படுகின்றது. மீன்வடிவம் அழிந்திருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது(I.C.1970:Plate No.II). இக்கல்வெட்டில் ‘காமிணி தமரஜஸ புதஸ அய அஸலிஸ லெணே’(I.C.13) எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்குள்ள மற்றைய கல்வெட்டில் ‘காமிணி தம’ என்பது மாத்திரம் தெரிகின்றது(I.C.56). இவ்விரண்டும் ஒரே வம்சத்தவர்களுக்குரியவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மகாவம்சத்தில் ‘தம்ம’ எனும் அரசன் பற்றிய எவ்வித குறிப்புமில்லை. ஆனால் கதிர்காம சத்திரிய வம்சத்தில் ‘ராஜ தம்ம’ பற்றிய குறிப்புண்டு. வம்சச் சின்னமும் ஒத்துப் போகின்ற நிலையில் மிகிந்தலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்ற இவர்கள் கதிர்காம சத்திரிய வம்சத்தவர் என்பது புலனாகின்றது(I.C.13, Gunavardana 1985:27). எனவே கல்வெட்டுக் கூறும் அய அஸலிஸ அபி₃ ஸவேரவின் தந்தை அய மஹாதிஸவின் சகோதரனாதல் வேண்டும் (வரைபடம்-01).

இவர்களது கல்வெட்டு மிகுந்தலையில் காணப்படுகின்றது என்பதற்காக அவர்களது ஆட்சிப்பரப்பு அதுவரை விரிவடைந்திருந்தது என்கின்ற முடிவிற்கு வரமுடியாது. ஆனால் பௌத்த சமயத்தின் செல்வாக்கின் காரணமாக பண்பாட்டு ரீதியாக ஒன்றிணையும் இடமாக அக்காலத்தில் விளங்கிய மிகுந்தலைக்கு சத்திரிய வம்சத்தவர்களின் வாரிசுகள் விஜயம் செய்துள்ளனர். இருப்பினும் இவர்களது கல்வெட்டுக்களில் அனுராதபுர ஆட்சியாளர்கள் பற்றிய எவ்வித குறிப்பும் காணப்படவில்லை. ஆதலால் அனுராதபுர சிற்றரசுகளின் மேலாட்சியை இவர்கள் ஏற்றுக் கொண்டனர் எனக் கருதுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. இக்கல்வெட்டுக்கள் உள்ள மிகுந்தலை அநுராதபுரத்தை அண்மித்திருந்த போதிலும் அவ்வரசின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு செல்வாக்கைப் பெற்றிருந்தது என்கின்ற முடிவிற்கு வரமுடிகின்றது(Gunavardana 1985:27).

### 7.0 முடிவுரை

கிழக்கு, தென்கிழக்கு இலங்கையில் கிடைக்கப்பெற்ற இப்பிராமி கல்வெட்டுக்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது ரோகணத்தின் பெரும் பகுதியை ஒரே வம்சாவழியினரான ராஜ

மஜிம வம்சத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் எனலாம். ஆயினும் இப்பகுதி முழுவதும் இவர்களது ஆட்சியில் அடங்கியிருக்கவில்லை. அதுமட்டுமின்றி இவையாவும் ஒரே அரசியல் பகுதியாகவும் அமையவில்லை. இவ்வம்சத்தின் காமிணியின் (மஜிம ராஜவின் மகன்) மூத்த மகன் மற்றும் ராஜ உதி என்போர் கும்புக்கன் ஓயா, மாணிக்க கங்கை பகுதிகளை ஆட்சி செய்தனர். அதேவேளை இளையவனான நாக இவ்வாட்சிப் பரப்புக்கு வடக்கே சுதந்திர ஆட்சியாளனாக விளங்கியுள்ளான். எனினும் மஜிம ராஜவின் மகனான காமிணியின் காலத்தில் இப்பகுதி முழுவதும் ஒரே மரபினரிடையே இருந்து பகிரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (Gunavardana 1985:21).


மஜிமராஜ வழிவந்தோர் இப்பகுதியில் உள்ள 27 குகைகளில் 17ஐ தானம் வழங்கியுள்ளனர். இது இவர்களது வளத்தையும், செல்வாக்கையும் வெளிப்படுத்துகின்றது. அத்துடன் பௌத்த சங்கத்திற்கு இவர்களின் பேராதரவு காணப்பட்டதுடன் தமது நன்கொடைகளை கல்வெட்டுக்களில் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தமை, அவர்களது பரம்பரை பற்றிய விபரங்களை வெளிப்படுத்தியமை போன்றவை சமய ஆர்வத்தை தவிர தமது கௌரவத்தினை வெளிப்படுத்தும் உந்துதலாகவே அமைந்துள்ளது எனலாம்(Gunavardana 1985:18).


மொட்டயகல்லிற்கு தென்மேற்கே அம்பாறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கலகிதி ஓடை எனுமிடத்தில் கி.பி முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டுக்குரிய ஐந்து வரிக் கல்வெட்டொன்று உள்ளது(I.C.2010:No.125). இது ஹவேரா பவத்த எனும் விகாரைக்கு பவத்த எனும் இளவரசன் இரு குளங்களின் நீர் வருமானத்தை வழங்கியமையை பதிவு செய்கின்றது. எனினும் ஹவேரா எனும் பெயர் எந்த இலக்கியத்திலும் குறிப்பிடப்படவில்லை.கதிர்காம சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த அரசியானஸவேராவிற்கு அவரது வாரிசுகளால் அமைக்கப்பட்ட விகாரை என இதனைக் கொள்ள முடியும். தவிர பௌத்த சமயத்திற்கு அதீத ஆதரவு வழங்கிய இவர் பௌத்தத்தை தழுவியிருக்கவும் கூடும். இக்கல்வெட்டின் அடிப்படையில் நோக்குகின்ற போது துட்டகாமிணியின் காலத்தின் பின்னரும் ஆங்காங்கே கதிர்காம சத்திரியர்களின் வாரிசுகள் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்துள்ளனர் என்கின்ற முடிவிற்கு வரமுடிகின்றது.


போதிமரம் நடும் விழாவில் கதிர்காம சத்திரிய மன்னன் ராஜ மஜிம பங்குபற்றியிருந்தல் வேண்டும். ஏனெனில் தந்தை ராஜ மஜிமவும், மகன் காமிணி திஸவும் ஐந்து கிராமங்களையும், ஒரு நகரத்தையும் சங்கத்திற்கு தானமளித்துள்ளனர். ராஜ மஜிம மூலமாக இவர்களது ஆட்சிப்பரப்பினுள்ளும் பௌத்தம் படிப்படியாக அதன் செல்வாக்கை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். எனினும் பௌத்த ஆதரவாளர்களான இவ்வம்சத்தவர்கள் இந்நெறியைப் பின்பற்றினர் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. எனினும் அபி$_3$ ஸவேரா ஒப்பற்ற பௌத்த சமய ஆதாரவாளராகக் காணப்பட்டார் என்பது அவரால் வழங்கப்பட்ட தான எண்ணிக்கையினூடாகத் தெரிகின்றது. எனவே பாளி இலக்கியங்கள் கூறுவது போல் முழு நாடும் அனுராதபுர இராசதானியினுடைய மேலாதிக்கத்தை ஏற்றிருக்கவில்லை எனலாம். அந்தவகையில் கிழக்கிலங்கையானது வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் கதிர்காமச் சத்திரியர்களின் சந்ததியினரால் ஆளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**துணைநூற் பட்டியல்**


1. சிற்றம்பலம்.சி.க.,1993,யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
2. Bimala Churn Law(E.d), 1970,Dipavamsa, The Ceylon Historical Journal, Vol-III. No.1-4.
3. Gunawardhana.R.A.L.H., 1982, "Prelude to the State", The Sri Lanka Journal of the Humanities, 1 & 2, University of Peradeniya, pp.1-39.
4. Paranavitana.S., 1970, Inscriptions of Ceylon: Early Brahmi Inscriptions, The Department Of Archaeology Ceylon, Colombo.
5. Paranavitana.S., 1983 Inscriptions of Ceylon: Late Brahmi Inscriptions- II[1], The Department Of Archaeology Sri Lanka,Moratuwa.
6. Paranavitana.S., 2001, Inscriptions of Ceylon: Late BrahmiMalini Dias(E.d),Inscriptions- II[2], Archaeological Survey Department, Sri Lanka.
7. Wilhelm Geiger(E.d), 1986,THE MAHAVAMSA, Asian EducationalServices-New Delhi, Madras.
8. Wilhelm Geiger (E.d),1998, THE CULAVAMSA, AsianEducational Services – New Delhi, Madras.
9. Ellawella Medhananda Himi, 2008, Nawathama Shilalipi Gaweshana, Dayavangsa Jeyakody and Company, Colombo.(Sinhala Version)










படம்-01

படம்-02

படம்-03




படம்-04